கண் வைத்திய நிபுணர்களினல் சிபார்சு செய்யும் கண்ணாடிகளைச் சரியாகக் கொடுப்பவர்கள்.

எஸ்.எம்.பெர்ணண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கி அருகாமை யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

S.M.Fernando
OPTICIANS

SIGHT TESTED PRESCRIPTIONS ACCURATELY DISPENSED
580 HOSPITAL ROAD, NEAR BANK OF CEYLON JAFFNA.

கடர் 5: பிரமோதூத ஆடி 17 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 10 (02 · 08 · 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 152

# தென்பகுதியிலும் போர் அபாயம்!
# அரசுக்கு இருமுனை நெருக்குதல்!!

## ஜனாதிபதி பிரேமா கவலை

கொழும்பு, ஆக. 2
**வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகளுடன் போர் புரிந்து வரும் இலங்கை அரசுக்கு தெற்கில் யுத்தம் ஒன்றை எதிர்நோக்கும் அபாயம் உருவாகி வருகிறது.**

**இந்த இருமுனை நெருக்குதல் குறித்து ஜனாதிபதி பிரேமதாஸா கவலை வெளியிட்டிருக்கிறார்.**

தென்னிலங்கையில் மீண்டும் ஜே. வி. பி. இயக்கம் தலை தூக்கும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும் –

அதனால் மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும் ஜனாதிபதி பிரேமதாஸா எச்சரித்திருக்கிறார்.

நேற்று அம்பாந்தோட்டையில் நடந்த மாவட்ட அரசு அதிகாரிகள் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

''ஒரு சில ஜே.வி.பியினரை சிறைக்குள் தள்ளுவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடமுடியாது தீவிரவாதிகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு ஒன்றை நாம் கண்டுபிடித்தாக வேண்டும்'' என்றும் அவர் கூறினார்.

வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகளுடன் இந்தியப் படை யுத்தம் புரிந்துகொண்டிருந்த வேளையில்–

இலங்கைப் படைகள் தமது பலத்தை முழு அளவில் திரட்டி தெற்கில் ஜே. வி. பியினருக்கு எதிராகப் பெரும் இராணுவ நடவடிக்கைகளை எடுத்தனர். இதன் மூலம் ஜே. வி. பியின் எதிர்ப்பை அவர்களால் ஓரளவு முறியடிக்க முடிந்தது.

ஆனால் இப்போது இலங்கைப் படைகள் வடக்கு, கிழக்கில் தமது சக்திக்கு அப்பாற்பட்ட போர் ஒன்றில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்வேளையில் தெற்கிலும் யுத்தம் ஒன்று வெடித்தால் இரு முனை நெருக்குதலை இலங்கை அரசால் சமாளிக்க முடியாமற் போகும் – இப்படி அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (உ)

## போட்டி அ.தி.மு.க. பிரிவு ஜெயலலிதாவை நீக்கியது!

சென்னை, ஆகஸ்ட் 2
அ. தி. மு. கவின் பொதுச் செயலாளர் பதவி, மற்றும் அடிப்படை உறுப்பினர் பதவி ஆகியவற்றில் இருந்து செல்வி ஜெயலலிதா நீக்கப்பட்டுள்ளார் என்று திரு. திருநாவுக்கரசு தலைமையிலான போட்டி அ. தி. மு. க. பிரிவு நேற்று அறிவித்தது.

போட்டி அ. தி. மு. கவின் பொதுக் குழு நேற்று சென்னையில் திரு. எஸ். திருநாவுக்கரசு தலைமையில் கூடியது.

அ. தி. மு. கவின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் அமைச்சர்களும் தற்போதைய எம். எல். ஏக்களுமான திரு. திருநாவுக்கரசு, திரு. கே. கே. எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் போட்டிப் பொதுக் குழுவைக் கூட்டியிருந்தனர்.

அ. தி. மு. க அவைத் தலைவர் பதவியில் இருந்து திருவள்ளி முத்துவையும் பொருளாளர் பதவியில் இருந்து திரு. செ. மாதவனையும் பொதுச் செயலாளர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

2 – 8 – 90
வியாழக்கிழமை ஆடி 17
சுபநேரம்: 07-33 — 09-03
இராகுகாலம் 01 33 — 03-03

## தம்பலகமத்தில் அறுவர் கைது

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 2
திருகோணமலை ஆலங்கேணியில் அகதி முகாமை நோக்கிச் சென்ற தங்கராசா என்பவரை வழி மறித்து இராணுவத்தினர் தாக்கியுள்ளனர். இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

அதே தினம் மாலை தம்பலகமத்தில் 6 பொது மக்களை இராணுவத்தினர் கைது செய்தனர்.


செவ்வாய்க்கிழமை பூவரசம் தீவில் உள்ள கடை உரிமையாளர்கள் அனைவரையும் கடைகளை பூட்டிவிட்டு முகாமுக்கு வருமாறு இராணுவத்தினர் உத்தரவிட்டுச் சென்றனர். (ஒ-9)

## யுத்தப் பகுதி மக்களுக்கு பிரிட்டன் மருந்து உதவி

கொழும்பு, ஆகஸ்ட் 2
வடக்கு - கிழக்கில் நடக்கும் யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பயன்படுத்தவென்று பிரிட்டன் 34 லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளை இலங்கை அரசுக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாட்ஸ்டன் நேற்று மருந்து வகைகளை சுகாதார அமைச்சிடம் ஒப்படைத்தார்.

இம்மருந்துகள் யுனிசெப் நிறுவனம் ஊடாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-எ]



யாழ். பல்கலைக் கழகத்திற்கு முன்பாக — குமாரசாமி வீதியில் நேற்று நடத்தப்பட்ட பொம்மர் 'ரொக்கட்' குண்டுத் தாக்குதலின்போது சேதமடைந்த ''எல்வ்'' வானையும், கடும் காயமுற்றவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதற்காக அவர் மற்றொரு வாகனத்தில் ஏற்றப்படுவதையும் படத்தில் காணலாம் (ஒ)

# திருநெல்வேலிப் பகுதியில் நேற்று பொம்மர் 'ரொக்கட்' தாக்குதல்

### ''எல்வ்'' வான் சேதம்; மூவர் காயமுற்றனர்

திருநெல்வேலியில் – யாழ். பல்கலைக் கழகத்திற்கு முன்பாக – குமாரசாமி வீதியால் வந்த 'எல்வ்' வானை நோக்கி பொம்மர் விமானம் ஒன்று நேற்று நண்பகல் 12. 45 மணிக்கு திடீரென 'ரொக்கட்' குண்டுத் தாக்குதலை நடத்தியது.

வானுக்கு ஒரு சில யாருக்கு முன்பாக புதுவித சத்தத்தைக் கிளப்பியவாறு 'ரொக்கட்' குண்டு விழுந்து வெடித்தது.

தேங்காய் ஏற்றிவந்த அந்த வானில் இருந்தவர்கள் பொம்மரைக் கண்டு வாகனத்தை விட்டு வெளியே ஓடிவிட்டதால் தப்பிக் கொண்டனர், எனினும் வீதியால் சென்று கொண்டிருந்த மூன்று பேர் காயமடைந்தனர். ஒருவர் கடும் காயங்களுக்கு இலக்கானார். தாவடியைச் சேர்ந்தவரான இரட்ணசிங்கம் (வயது 60) என்ற அவர் ஆபத்தான நிலையில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

மற்றும் இருவரும் இச்சம்பவத்தில் காயமடைந்தனர். திருநெல்வேலியைச் சேர்ந்த இம்மானுவேல் [வயது 55], வயாவிளானைச் சேர்ந்த தில்லைநாதன் குணவரதாஸ் ஆகியோரே அந்த இருவரும் ஆவர்.

'ரொக்கட்' தாக்குதலின் காரணமாக வானின் முன் கண்ணாடி நொருங்கிச் சேதமடைந்தது அப்பகுதியில் மதில் ஒன்றும் சேதமுற்றது. (ஒ – 143 – 10 – 9)

## அகதி முகாம் யோசனைக்கு இ.காங்கிரஸ் கண்டனம்

புதுடில்லி, ஆக. 2
இலங்கையிலே அகதிமுகாம்களை ஏற்படுத்தி இலங்கைத் தமிழ் அகதிகளை தங்கவைக்க இந்திய மத்திய அரசு எடுத்து வரும்முயற்சிகளை முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி தலைமையிலான இந்திரா காங்கிரஸ்கட்சிகண்டித்துள்ளது.

இத்தகவலைகாங்கிரஸ் கட்சியின் பேச்சாளர் ஒருவர் நேற்று புதுடில்லியில் வெளியிட்டார்.

இலங்கைத் தமிழ் அகதிகள் விஷயத்தில் மத்திய அரசு மனிதாபிமான முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்றும் அப் பேச்சாளர் சொன்னார். [இ-எ]

## அகதிகளுக்குப் பாதுகாப்பு கோரி ஐ. நா. வுக்கு மகஜர்

கொழும்புத்துறை, ஆக.2
அகதிகளின் பாதுகாப்பை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரியிடம் ஐந்து அம்சக் கோரிக்கை கொண்ட மகஜர் ஒன்று நேற்றுக் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரைக் கையளிப்பதற்காக, அகதிகள் மௌன ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

தமிழ்மாநிலஅகதிகள் பாதுகாப்பு மன்ற உறுப்பினர்களும், அகதிகளும். பொதுமக்களும் கலந்துகொண்ட மௌன ஊர்வலம் கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலயத்திலிருந்து ஆரம்பமானது.

மௌன ஊர்வலம் புங்கங்குளம்வீதி, நாவலர்வீதி வழியாக நல்லூரிலுள்ள அகதிகளுக்கான ஐக்கியநாடுகள்உயர்ஸ்தானிகராலயத்தைச் சென்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வைப் பகுதியில் வணக்க ஸ்தலங்கள் சேதம்

வல்வெட்டித்துறை, ஆக. 2
ஸ்ரீலங்கா கடற்படையினர் கடலில் இருந்து தொடர்ந்து நடத்தி வரும் பீரங்கித் தாக்குதல்களினால் வல்வெட்டித்துறைப் பகுதியிலுள்ள பல வணக்க ஸ்தலங்கள் சேதமடைந்துள்ளன.

வல்வெட்டித்துறைப் பகுதி குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தாக்குதல்கள் நடத்தப்படுவதால், மக்கள் இடம் பெயர்ந்து சென்று கொண்டிருக்கின்றனர்.

பீரங்கித்தாக்குதல்களினால் நெடியகாடு பிள்ளையார் கோவில், வல்வை வைத்தீஸ்வரர் தேவஸ்தானம், வல்வை முத்துமாரி அம்பாள் ஆலயம், றோமன் கத்தோலிக்கத் தேவாலயம் உட்பட பல வணக்க ஸ்தலங்கள் சேதமடைந்துள்ளன.

இவற்றைவிட பாடசாலைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் 1, 500 அகதிகள்

சென்னை, ஆக. 2
நேற்று மட்டும் ஆயிரத்து 500 இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தனர்.

இவர்களையும் சேர்த்து தமிழகம் சென்ற இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 52 ஆயிரமாக அதிகரித்தது. (ஒ-எ)

### முச்சந்தி முரளி



ஹெலிதான் ரொக்கட் அடிக்குது எண்டு சனம் பயப்பிட, பொம்மரும் அந்த ''ஸ்டயிலை''ப் பிடிச்சிட்டுது பாத்தியளே... !

## ஒய்வூதிய கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஆக.2
யாழ்-மாவட்டத்தில் உள்ள ஒய்வூதியக்காரர்களுக்கான கொடுப்பனவுகளை எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து ''வவுச்சர்கள்'' வராததை அடுத்து, கடந்த மாத கொடுப்பனவு அடிப்படையில் ''வவுசசர்''களை தயாரிக்கும் வேலையை யாழ். செயலக ஒய்வூதியக் கிளை ஊழியர்கள் நேற்று ஆரம்பித்தனர். [ஒ-3]

## வெளிநாட்டு பிரசைகளையே அழைத்துச் செல்ல முடியுமாம்

வெளிநாட்டுப் பிரசைகளை மட்டுமே நாம் அழைத்துச் செல்ல முடியும். வெளிநாட்டில் வேலைசெய்துவிட்டு வந்தவர்களையும், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றவர்களையும், வெளிநாட்டில் படிக்கச் செல்பவர்களையும் அழைத்துச் செல்ல முடியாது:

– இப்படி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் பொதுமக்களிடம் தெரிவித்தனர்.

'வெளிநாட்டுப் பாஸ்போர்ட் பெற்றஇலங்கையரையும் நாம் கொழும்புக்கு அழைத்துச் செல்ல முடியும். வேறு எவரையும் அழைத்துச் செல்ல எமக்கு அதிகாரம் இல்லை'' – என்றும் பிரஸ்தாப அதிகாரிகள் நேற்றுதங்களைச் சந்தித்து உதவி செய்யக்கேட்ட பொதுமக்களிடம் தெரிவித்தனர். (ஒ-3)

### மன்னார் - உயிலங்குளம் வீதியில்

# விமானக் குண்டு வீச்சு உதவியுடன் முன்னேற முற்படும் ராணுவ அணி!

### புலிகள் வழிமடக்கித் தாக்கியதில் 14 படையினர் பலி!!

யாழ்ப்பாணம், ஆக. 2
மன்னார் — உயிலங்குளம் வீதியில் முன்னேற முயன்ற சிறிலங்கா படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று பெரும் தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள்.

புலிகளின் தாக்குதல்களை சமாளித்து அந்த வீதியில் ஒரு மைல் தூரம் முன்னேறுவதற்கு சுமார் ஐந்து மணி நேரம் வானத்தாக்குதல்களை நடத்தவேண்டியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் சிறிலங்காப்படையினர் 14 பேர் உயிரிழந்ததாகவும், விடுதலைப்புலிகள் தரப்பில் 4 பேர் வீரமரணமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

நேற்று சிலாவத்துறை முகாமிலிருந்து மன்னார் –உயிலங்குளம் வீதி வழியாக 40 வாகனங்களில் தள்ளாடி முகாமை நோக்கிப் புறப்பட்ட படையினரையே புலிகள் வழிமடக்கித் தாக்கியதாகத் தெரிவிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

**இந்தியச்செய்தி**

# தேவிலால் பதவி நீக்கம்!

புதுடில்லி, ஆக. 2
**இந்திய துணைப் பிரதமரும் விவசாய மந்திரியுமான தேவிலால் அமைச்சரவையிலிருந்து நேற்று நள்ளிரவு பதவி நீக்கம் செய்யப்பட்டார்.**

## ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம். ஆக.2
காரைநகர் கடற்படையினர் நேற்றுக் காலை 10மணி முதல் 11 மணி வரை தம் பாட்டிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர். [இ-9]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### Typewriters

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ் ஆங்கிலம் ரைப்பிங் செய்துகொடுக்கவும் Fudo Enterprises (Shiva Studio Upstair) Jaffna Road, Manipay. (சி-5289)

### கோழித்தீன்

உங்களுக்குத் தேவையான தரமான கோழித்தீன் வகைகள் தயாரித்துக்கொடுக்கப் படும். தொடர்புகொள்ளவும், சிவா மில்ஸ் அன் இன்டஸ்றீஸ், 46/.1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [13962]

### காணவில்லை

90, திருநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த கந்தசாமி என்பவருடைய மகன் ரவி என்னும் சிவந்த தோற்றமுடைய 12 வயதுப் பையனை V. S. நவரத்தினம் 173, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம் கடையிலிருந்து 28 - 7 - 90 முதல் காணவில்லை. தகவல் அறிந்தோர் மேற்படி விலாசத்துக்கு அறியத் தரவும். சன்மானம் வழங்கப்படும். (13606)

### கிளீன் கட்

யாழ். மின்சார நிலைய வீதியில் இயங்கிவந்த கிளீன் கட் ஸ்தாபனம், பிறவுண் வீதியில் 37, சிவகுருநாதன் வீதி (நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்) தற்போது இயங்கி வருகிறது. (C/5291)

## ஆலயத்தில் திருடியவர் பிடிபட்டார்

திருநெல்வேலி, ஆக. 02

நள்ளிரவு நேரம் ஆலயத்தில் திருடியவர் வழியில் ஊர்காவலில் இருந்தவரினால் பிடிக்கப்பட்டார்.

இச்சம்பவம் மல்லாகம் சந்தியில் இடம் பெற்றது.

சந்தேகநபர் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். [இ-143]

## கசிப்பு பறிமுதல்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட். 2

ஊரெழு கிழக்கில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த ஒருவரது வீட்டில் இருந்து 12 போத்தல் கசிப்பும், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப் படும் பொருள்களும் உபகரணங்களும் கோப்பாய்பிரதேச விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன. அவை பறிமுதல் செய்யப்பட்டு உரும்பிராய் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதேச அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டன.

சீனிக்குத் தட்டுப்பாடான இந்த நேரத்தில் பெருமளவு சீனி கசிப்பு உற்பத்திக்குபயன்படுத்தப்பட்டுள்ளதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. [அ-5]

## மத்திய அரசு ஏற்கவலியுறுத்து

சென்னை, ஆக. 2

தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழர் தங்கியுள்ள அகதி முகாம்களின் நிர்வாகத்தை மத்திய அரசே மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ் நாடு சுதந்திர போராட்ட வீரர்கள் சங்கம் கேட்டுள்ளது. (இ-எ)

## தடை நீக்கம்

கொழும்பு, ஆக. 2

குவைத் நாட்டில் வீட்டுப் பணிப்பெண்களாகத் தொழில் புரிய இலங்கையர் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடை நேற்றுடன் நீக்கப்பட்டது.

தொழில் அமைச்சு நேற்று முன்தினம் இதனை அறிவித்தது. (ஒ-எ)

## அகதிகளுக்கு நிதி உதவி

பச்சிலைப்பள்ளி, ஆக. 2

தென்மராட்சிப் பகுதிக்கு இடம் பெயர்ந்து வந்துள்ள அகதிகளின் நிவாரண வேலைகளுக்காக சாவகச்சேரி நகரசபை ஊழியர்கள் தமது ஜூலை மாதச் சம்பளத்திலிருந்து ரூபா 10 ஆயிரத்து 500 வழங்கினார்கள்

நகரசபை செயலாளர் த. நவரத்தினராசா தென்மராட்சி அகதிகள் நிவாரணக் கழகத்தலைவர் பூ. சுந்தரம் பிள்ளையிடம் இதனைக் கையளித்தார். (இ-117)

# பட்டினிச்சாவை எதிர்நோக்கும் குருநகர், பாஷையூர் அகதிகள்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 2

குருநகர், பாஷையூர் பகுதிகளில் இருந்துஇடம்பெயர்ந்து பூநகரியில் தஞ்சமடைந்த 3 ஆயிரம்குடும்பங்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி உதவி அரசாங்கஅதிபர் பிரிவில் உள்ள குடியேற்றக் கிராமங்களான நாச்சிக்குடா, பல்லவராயன் கட்டு, கிராஞ்சி, வலைப்பாடு, வேரவில், பாலாவி, குமுளமுனை. பூநகரி ஆகிய பகுதிகளில் தஞ்சமடைந்துள்ள இந்த மக்கள் உணவு இன்றி, தொழில் இன்றி, பணமின்றி பஞ்சத்தில் வாடுவதாகத் தெரிவிக்கப் பட்டது.

அரச நிவாரணமோ, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியோ இன்றி அவர்கள் இன்னற்படுவதாக அங்கிருந்து உதவி கோரி நேற்று இங்கு வந்த ஒருவர் தெரிவித்தார். [ஒ-3-5]

## திருடர் கைவரிசை

கொடிகாமம் கண்டி வீதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் பின்புறத்தில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்கள் இரவு திருடப்பட்டன. (இ-75)

## இன்றைய கால கட்டத்தில் முதலுதவிப் பயிற்சி அவசியம்

### முறை சாராக் கல்வி அதிகாரி உரை

''முறைசாரக் கல்விப்பிரிவில் பயிலும் மாணவர்கள் தம்மையும், மற்றவர்களையும் பாதுகாக்கவே முதலுதவிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இன்றைய கால கட்டத்தில் சகல மாணவர்களுக்கும் முதலுதவிப் பயிற்சி அளிக்கும் அறிவு அவசியமாகிறது''

யாழ்.மாவட்ட முறைசாராக் கல்விப் பிரிவு அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் முதலுதவிப் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முறைசாராக் கல்விப்பிரிவில் பயிலும் சகல மாணவர்களுக்கும் முதலுதவிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதில் பாடசாலை மாணவர்களும் பங்கு பற்றலாம் என்றும் அவர் கூறினார். (இ - 68)

# ஒவ்வொருவரும் தம் பங்களிப்பை போராட்டத்துக்கு வழங்க வேண்டும்

### முதலுதவிப் பயிற்சிக் கூட்டத்தில் உரை

மானிப்பாய், ஆக. 2

தமிழீழத்தில் இன்று நடைபெற்றுவரும் போராட்டம் அரசபடைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போராட்டம் அல்ல. தமிழினத்துக்கும் ஏகாதிபத்திய இனவாதிகளுக்கும் இடையிலான போராட்டம் ஆகும்.

இப்போராட்டத்தை விரைவில் முடிவுக்கு கொண்டுவர வேண்டுமானால் ஒவ்வொரு தமிழனும் தனதுபங்களிப்பை போராட்டத்துக்கென வழங்க முன்வர வேண்டும்.

மருதனாமடத்தில் நடைபெற்ற முதலுதவிப் பயிற்சி வகுப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய வலிகாமம் பிரதேச விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த திரு. நிக்சன் இவ்வாறு கூறினார்.

விடுதலைப் புலிகள் இயக்க மாணவர் இயக்க பிரதிநிதிகள் உட்பட சுமார் ஐந்நூறு பேர் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் திரு. நிக்சன் மேலும் கூறியதாவது:.

அரசபடைகளுக் கெதிராக நாம் தொடுத்திருக்கும் யுத்தம் நீண்டுகொண்டு போகின்றது.

ஆரம்பத்தில் ஸ்ரீலங்கா படைகளுடனும் பின் இந்திய இராணுவத்துடனும் போரிட்டு மூன்றாம் கட்டமாகநாம் மீண்டும் ஸ்ரீலங்காபடைகளுடன் மோதலை ஆரம்பித்துள்ளோம்.

இது இறுதியான போராட்டமாக மக்களால் கருதப்படுகின்றது. இந்த இறுதிப் போராட்டத்தை விரைவில் முடிவுக்கு கொண்டுவர வேண்டுமானால் மக்களின் ஏகோபித்த பங்களிப்பு அவசியம்.

மக்கள் இரண்டு பவுண் கொடுத்ததுடன் தமது பங்களிப்பு முடிந்துவிட்டதாக கருதக்கூடாது. ஒவ்வொருவரும் இப் போராட்டத்தை தமது சொந்தப் போராட்டமாகக் கருதிச் செயற்பட வேண்டும். ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் ஒருவராவது போராட்டத்தில் கலந்து கொள்ள முன்வர வேண்டும். ஆயுதம் ஏந்திப் போராட முடியாதவர்கள் கூட முதலுதவிப் பயிற்சிகளை பெற்று போராளிகளுக்கு உதவுவதுடன் இரத்ததானம் வழங்குதல், பதுங்கு குழிகள் வெட்டுதல், உணவு தயாரித்துக் கொடுத்தல் போன்ற பல்வேறு வழிகளில் போராளிகளுக்கு உதவுவதன் மூலம் தங்கள் பங்களிப்பை செலுத்த முடியும்.

இப்படி அவர் கூறினார். [இ-90]

## ஊர்வலம், கூட்டங்களுக்கு சென்னை நகரில் தடை!

சென்னை, ஆக. 2

சென்னை நகரில் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்களுக்கு 15 நாள் தடை விதிக்கும் உத்தரவு ஒன்று நேற்று வெளியிடப்பட்டது.

அ.தி.மு.கவில் இருந்து வெளியேற்றப்பட்ட மூன்று எம்.எல்.ஏக்கான திருவாளர்கள் திருநாவுக்கரசு, கே.கே. எஸ்.இராமச்சந்திரன், உக்கம்சந்த் ஆகியோர் அ.தி.மு.கவின் பொதுக்குழுக் கூட்டத்தை இன்று நடத்தப் போவதாக அறிவித்திருக்கின்றனர்.

இதன் எதிரொலியாக ஏற்படக்கூடிய அசம்பாவிதங்களைத் தவிர்க்கவே இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக சென்னை பொலீஸார் அறிவித்தனர். (ஒ-எ)

## பாதுகாப்பை பலப்படுத்த தாட்சர் கோருகிறார்

லண்டன், ஆக. 2

பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பாதுகாப்பை பலப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இப்படி பிரதமர் மாகரட் தாட்சர் வேண்டுகோள்விடுத்திருக்கிறார்.

லண்டன் தென் கிழக்குத் தொகுதி ஒன்றின் ஆளும் கட்சி எம்.பி ஒருவர் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்ததைத் தொடர்ந்தே,பிரதமர் இவ் வேண்டுகோளை விடுத்தார். [இ-எ]

## வளலாய் மக்கள் இடம்பெயர்வு

கோப்பாய், ஆக. 2

கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பலாலி முகாமை அண்டிய பகுதிகளில் கடும் தாக்குதல்கள் நடந்ததால் வளலாய், இடைக்காடு ஆகிய பகுதிகளிலிருந்து பெருமளவு மக்கள் வெளியேறி வேறுபகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். [அ-72]

## அமைதி வேண்டிப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஆக. 2

நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைக்க வேண்டி சுதுமலை தெற்கு எச்சாட்டி வைரவர் ஆலயத்தில் பிரார்த்தனை நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் இப் பிரார்த்தனையில் கலந்து கொண்டனர். (ஓ)

## அறிவித்தல்

இல. 58, நல்லூர் குறுக்குத்தெரு, நல்லூரில் அமைந்துள்ள எமது ஆர். வி. ஜி மெடிக்கல்ஸ் ஸ்தாபனத்தில் சகலவிதமான மருந்துகளும் ஊசிமருந்து வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகம்

**ஆர். வி. ஜி. மெடிக்கல்ஸ்,**
58, நல்லூர் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (13069)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. இராசதுரை சபாநாதன்**

அன்னையின் மடியில்:- 24-01-1930 ஆண்டவன் அடியில்:- 12-08-1989

ஆண்டு ஒன்று சென்றாலும் நீங்கள் எம்மோடு வாழ்ந்த நாட்கள் இன்றும் எம் நெஞ்சில் நிலைத்து நிற்கின்றன. ஆண்டுகள் நூறு ஆனாலும் எங்களை விட்டு அழியாது உங்கள் நினைவு, உங்கள் ஆத்மா சாந்தியடைய தவமியற்றி தொழுது தினமும் கண்ணீரால் அஞ்சலி செலுத்துகின்றோம்.

உங்கள் பிரிவால் தவிக்கும்
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம். (13607)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
**சுந்தரலிங்கம் பிரபாகர் (றஞ்சன்)**

தோற்றம்: 08 - 08 - 1967 மறைவு: 08 - 08 - 1984

திதி: 02 — 08 — 1990

எங்கள் அன்புச் செல்வமே!

அருமை மைந்தனே! அறிவுள்ள ஆசானே றஞ்சனே! இன்றுடன் ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்ததடா. ஆறு என்ன அறுபது தான் செல்லட்டுமே உன் திருமுகம் எங்கள் இதயக்கண்ணை விட்டு நீங்காது. ஐயா! கடல் அலைதான் ஓய்ந்த போதிலும் எங்கள் இதயத்தில் உன் எண்ண அலைகள் ஓயாது. ஐயா! உன்னை நாம் எங்கு தேடுவோம்?

உன் ஒளிமுகத்தை எங்கு காண்போம்?
உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து நிற்கும்

அப்பா, அம்மா, அண்ணாமார்,
தங்கைமார், தம்பிமார்.

காங்கேசன்துறை; [13604]

## ஈர் ஐந்து வருடங்கள் தொடர்கின்ற நினைவுகள்



**திரு. ஜோசப் அன்ரன்**
(பொலிஸ் சார்ஜன்)

அன்னையின் மடியில்: 14 - 11 - 1935 அரக்கர் அழிப்பில்: 02 - 08 - 1980

ஆண்டுகள் 10 கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்திக்கு
பிரார்த்திக்கும்

தாய், தந்தையர்,
மனைவி, பிள்ளைகள்.

கனால் வீதி,
மாதகல். (13956)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
**ரஜனி (கிளி) விஜயகுமார்**

மண்ணில்: 25 - 10 - 1954 விண்ணில்: 03 - 07 - 1990

எமக்கு ஒளிவிளக்காகத் திகழ்ந்த செல்வமே! எதிர்பாராத விதத்தில் எம்மையெல்லாம் பிரிந்து எம்மை என்றும் கலங்க வைத்துச் சென்று இன்று 31 நாட்களாகி விட்டன. இன்றும், என்றும் உங்கள் நினைவிலேயே வாழ்ந்து வருவோம். உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்கா.

அன்னாரின் மரணச்சடங்குகளில் கலந்தும், அனுதாபச் செய்திகளை அனுப்பியும், எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைவர்க்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் 02 - 08 - 1990 வியாழக்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக அவரது இல்லத்தில் நடைபெறும் இறைவணக்கத்தில் கலந்து இறைவனை இறைஞ்சும் வண்ணமும், மதிய உணவில் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி. விஜயகுமார் (கணவன்), பிள்ளைகள்,
திருமதி மு. தியாகராஜா (தாயார்),
திரு. திருமதி துரைஐயா (அக்கா, அத்தான்)

''சிவநிதி''
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (13608)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பட்டினிச் சாவை தடுக்க உதவுங்கள்

வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு இன்னும் பத்து நாட்களுக்குள் போதிய உணவுப் பொருள்களை அனுப்பாவிடில் அங்கு பசி பட்டினி நிலைமை தோன்றும்!

ஏற்கனவே பல தடவைகள் இப்பத்தியில் நாம் சுட்டிக் காட்டிய ஆபத்தான நிலையை, இப்போது இலங்கையில் நிலைகொண்டு மனிதாபிமான உதவிகளைச் செய்து வரும் சர்வதேச நிறுவனங்கள் எடுத்துச் சொல்லி உள்ளன.

வடக்கு - கிழக்கில் உணவுப் பஞ்சம் வராது; போதிய அளவில் அவை அங்கு கையிருப்பில் உள்ளன என்று கொழும்பில் இருந்து கொண்டு, ஜனாதிபதி தொடக்கம் உணவு ஆணையாளர் வரை கூறியவை தவறானவை. வடக்கில் உணவுப் பற்றாக்குறை உண்டு என்பதை எடுத்துரைத்திருந்தோம். கிழக்குடன் தொடர்பு இல்லாததால் சரியான புள்ளிவிவரங்களை அறிந்து கொள்ளவோ உண்மையான உணவு நிலையை வெளிப்படுத்தவோ எம்மால் முடியவில்லை.

ஆனால் வடக்கும்; கிழக்கும் பஞ்சநிலையை எதிர்நோக்கி உள்ளன என்பதைச் சர்வதேச நிறுவனங்கள் இப்போது ஊர்ஜிதம் செய்து விட்டன!

இந்த அறிக்கையைக்கண்டதும் தனது பொய்ப் பிரசாரத்தைத் தொடரும் பொருட்டு, வடக்கு - கிழக்கிற்குக் கப்பல்களை அடுத்தடுத்து அரசு அனுப்பக் கூடும். ஆனால் அவற்றில் கொண்டுவரப்படும் உணவுப் பொருள்கள் யானைப் பசிக்குச் சோளப் பொரியாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

உலக அபிப்பிராயம் தமக்கு எதிராக மாறிவிடக் கூடாதே என்பதற்காக, அரசாங்கம் இதுவரை மூன்று தடவைகள் வடக்குக்கு அனுப்பிய உணவுப் பொருள்களின் அளவு அதனைச்சந்தேகத்துக்கு இடமின்றி முன் கூட்டியே எடுத்துச் சொல்கின்றன.

இரண்டு வாகன அணிகள் மூலமும் கப்பல் மூலமும் கடந்த இரண்டு வாரங்களில் மொத்தம் 516 தொன் உணவுப் பொருள்களே யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வந்து சேர்ந்துள்ளன. ஏழு கிழமைகளுக்குரிய தேவைக்குப் பொதுவாகக் கிடைத்துள்ள இவை யாழ் மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு 1.2 நாளுக்கு மட்டுமே போதுமானதாகும்.

இந்த வேகத்தில் உணவுப் பொருள்கள் வந்தால், யாழ்ப்பாணத்துக்கு நாளாந்தம் ஒவ்வொரு கப்பல் வர வேண்டுமே! வருமா? தமிழர் மீது பொருளாதாரத் தடை விதிக்கக்கூடாது என்ற மனமிருந்தால் ஒரே நாளிலேயே அனுப்பிவிட முடியாதா, என்ன?

எனவே உலக நாடுகள் உண்மை நிலையை அவதானித்துக் கொள்ளட்டும். பிரிட்டன் வழங்கியதுபோல சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்கள் மூலம் தங்கள் மனிதாபிமான உதவிகளை வழங்கி ஈழத்தமிழர்களைப் பட்டினி — நோய்ச் சாவில் இருந்து காப்பாற்றட்டும் இந்தியாகூட, முப்பது முக்கிய பிரமுகர்கள் ஆலோசனை கூறியதுபோல உணவுப் பொருள்களையும் வைத்திய நிபுணர்களையும் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் மூலம் அனுப்பலாம்.

உரிய நேரத்தில் செய்யும் உதவி பெறுமதி மதிக்க முடியாதது. பூநகரி போன்ற பகுதிகளில் தஞ்சம் அடைந்திருக்கும் அகதிகள் பட்டினிச் சாவின் விளிம்பு நிலைக்கு வந்துவிட்டார்கள் என்பன போன்ற செய்திகள் உலக நாடுகள் கவனத்தை ஈர்க்கும் என நம்புகிறோம்.

## அடுத்த கப்பல் வந்த பின்பே உணவு முத்திரை

யாழ்ப்பாணம், ஆக. 2

உணவுமுத்திரை நாலாம் இலக்கத்துக்கான விநியோகம் அடுத்த கப்பல் வந்த பின்பே ஆரம்பமாகும் என்று செயலக அதிகாரி தெரிவித்தார்.

வடமராட்சிப் பகுதியில் இந்த முத்திரைக்கான விநியோகம் முடிவடைந்த போதும், மற்றைய பகுதிகளில் விநியோகம் மேற்கொள்ளப் படவில்லை.

உணவுப் பொருள்கள், போதுமான அளவு கையிருப்பில் இல்லாததே விநியோகம் தடைப்பட்டதற்குக்காரணம். (இ-3)

# வவுனியாவில் 30,000 விவசாயிகள் தொழில் எதுவும் இன்றிப் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஆக. 2

''வவுனியா மாவட்டத்தில் உள்ள 30 ஆயிரம் தமிழ் விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். தொழில் இன்றி, உணவு இன்றி பட்டினிச்சாவை அவர்கள் எதிர் நோக்கியிருக்கிறார்கள்''

இப்படியான அறிக்கை ஒன்றை வவுனியா முன்னாள் அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் கொழும்புக்கு அனுப்பியுள்ளார்.

வவுனியா நிர்வாகத்தை கேர்னல் ரத்நாயக்காவிடம் ஒப்படைக்க முன் அவர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு கடைசியாக அனுப்பிய அறிக்கையிலேயே இப்படித் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

கடந்த மாத செய்கைக் காலத்தில் விவசாயிகள் மேற்கொண்ட விவசாய முயற்சியின் காரணமாகப் பெற்ற நெல். மற்றும் உப உணவுப் பொருள்களின் கையிருப்பு முடிந்துவிட்டது. மீண்டும் எதிர்வரும் அக்டோபர் மாதம் அவர்கள் விவசாய முயற்சியில் இறங்க இப்போதே வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இங்கு எரிபொருள்கள்இல்லாததால் அவர்கள் விவசாய முயற்சியை ஆரம்பிக்க முடியாதுள்ளது. அத்துடன் அவர்கள் தமது பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியாத நிலையில் அலைகிறார்கள்.

விவசாய முயற்சி மேற்கொள்ளாத இந்த நேரத்தில் அவர்கள் உணவு முத்திரை, ஜனசக்தி உதவிகளையே நம்பி வாழ்ந்து வந்தார்கள். அவற்றுக்கான விநியோகம் தடைப்பட்டுள்ளது. நகரில் உள்ள உணவுப் பொருள்களையும் எடுக்க முடியாத நிலை.

இந்நிலையில் அவர்கள் பட்டினிச்சாவை எதிர் நோக்கியுள்ளார்கள்.

இப்படி அவர் தெரிவித்திருந்தார். (இ-3)

## ஹெல்மட் அணியாவிடில் தண்டனை

மோட்டார் சைக்கிளில் ஹெல்மெட் அணியாமல் செல்பவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

முதல் தடவை குற்றமிழைப்பவருக்கு 250 ரூபாவும் இரண்டாவது தடவை 500 ரூபாவும் அபராதமாக விதிக்கப்படும்.

மூன்றாவது தடவை குற்றமிழைப்பின் 750 ரூபா அபராதத்துடன் அவரது சாரதி லைஸன்ஸும் ரத்துச் செய்யப்படும். (ஒ-எ)

## ''தென்றல்'' உதவி

கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் அகதிகளுக்காக ''தென்றல்'' குழுவினரால் சேகரிக்கப்பட்ட உடைகள், உணவுப் பொருள்கள் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டன. (இ)

# இடம்பெயர்ந்த ஆசிரியர்களில் ஒரு சிலருக்கு முற்பணமில்லை

## ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஆக. 2

இடம்பெயர்ந்த ஆசிரியர்களில் ஒரு பகுதியினருக்கு சம்பள முற்பணம் வழங்க நடவடிக்கை எடுக்காமை குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி, அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழர் ஆசிரியர்களுக்கும், வடக்குக் கிழக்குக்கு அப்பாலிருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கும் யாழ். கல்வித் திணைக்களம் சம்பள முற்பணம் வழங்க முடியாதென தெரிவித்துள்ளதாக சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் இ. த. ஆ. சங்கத்தின் பொதுச் செயலாளரிடம் முறையிட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் இன்று அரசாங்க அதிபரையும், கல்விப் பணிப்பாளரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

மேலும் தாமதியாது 1990 ஜூன், ஜூலை மாதச் சம்பளங்களையும் வழங்க நடவடிக்கை எடுப்பதோடு, போக்குவரத்துச் சூழ்நிலை சீராகும் வரை எதிர்காலத்தில் மாதா மாதம் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும், அவர் இருவரிடமும் கேட்பார்.

இன்றைய சந்திப்பின் பின்னர் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சங்கம் ஆக்கபூர்வமான இறுதி முடிவுகளை மேற்கொள்ளும் எனவும் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ)

## அகதி முகாமில் இட நெருக்கடி

பச்சிலைப்பள்ளி, ஆக. 2

முகமாலை தேவாலயத்தில் உள்ள அகதிகள் முகாமில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பல பகுதிகளில் இருந்தும் இடம்பெயர்ந்த மக்கள் இங்கு வந்து தஞ்சமடைகின்றனர். (இ-117)

## தபால் ஊழியரின் ஜூலைச்சம்பளம்

யாழ்ப்பாணம், ஆக. 2

வடமாகாண தபால் பகுதி ஊழியர்களின் ஜூலை மாதச் சம்பளத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு மானிப்பாயிலுள்ள தற்காலிக கணக்காளர் கந்தோரில் நடைபெறவுள்ள சந்திப்பில் வடமாகாண தபாற் கந்தோர்களின் பொறுப்பதிகாரிகளிடம் அதற்கான ஊழியர்களின் சம்பளம் வழங்கப்படும்.

வடமாகாண தபாற்கந்தோர்ப் பொறுப்பதிகாரிகள் சகலரையும் கணக்காளர் கந்தோருக்கு இன்று சமுகம் கொடுக்குமாறு தபால் திணைக்கள மாகாணப்பணிப்பாளர் திரு. எஸ். என். சேதுகாவலர் கேட்டுள்ளார். இன்றைய நிலையில் தபால் அலுவலகங்களில் பணி புரிவது குறித்தும் அந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளது. [அ-5]

## இனிப்புப் பண்டங்களில் அதிக அளவு சக்கறின்

### சுகாதார அதிகாரி எச்சரிக்கை

காங்கேசன்துறை, ஆக 2

''தற்சமயம் சீனிக்குதட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் சக்கறின் போன்றவற்றில் இனிப்பு, ரொபி தயாரிக்கப்பட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவற்றைப் பொதுமக்கள் பாவிப்பதைத் தவிர்க்க வேண்டும்''

இப்படியான ஆலோசனை ஒன்றை யாழ். மாவட்ட தரக்கட்டுப்பாட்டு சுகாதார அதிகாரி திரு. த. மகாதேவன் விடுத்துள்ளார்.

இத்தகைய இனிப்புப்பண்டங்களை உண்பதன் மூலம் வயிற்றோட்டம், நரம்புத் தளர்ச்சி போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பண்டங்களை மாதிரி சோதனைக்காக கொழும்புக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-68)

## தென்மராட்சியில் 38,500 அகதிகள்

பச்சிலைப்பள்ளி, ஆக. 2

தென்மராட்சிப் பகுதிக்கு இதுவரை 8,850 குடும்பங்களைச் சேர்ந்த 38,500 பேர் இடம் பெயர்ந்து வந்துள்ளனர்.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பு. சுந்தரம் பிள்ளை இதனைத் தெரிவித்தார்.

இவர்களுக்கு உலர்உணவு நிவாரணம் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## அகதிகள் தகவல் நிலையம்

தென்மராட்சிப் பகுதிக்கு இடம்பெயர்ந்து வரும் மக்களின் நலன்கருதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் அகதிகள் தகவல் நிலையமும் மத்திய களஞ்சியசாலையும் தென்மராட்சி அகதிகள் நிவாரணக் கழகத்தினால் அமைக்கப்பட்டுள்ளன.

கழகத் தலைவர் திரு. பு. சுந்தரம் பிள்ளை இதனைத் தெரிவித்தார். (இ-117)

## பங்கீட்டு அடிப்படையில் மா

யாழ்ப்பாணம், ஆக. 2

யாழ். மாவட்டத்துக்கு வந்து சேர்ந்த மாவை பேக்கறிகளுக்கு விநியோகித்து பாணாகத் தயாரித்து பங்கீட்டு அடிப்படையில் மக்களுக்கு வழங்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

மாவை மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்க செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-3)

## எழுதுமட்டுவாளில் தாக்கு

பச்சிலைப்பள்ளி, ஆக. 2

கடந்த சனிக்கிழமை காலையும், மாலையும் எழுதுமட்டுவாளில் இருந்து பளை வரை ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது.

காலையில் நடத்தப்பட்ட தாக்குதலில் பளை நகர்ப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களின் தளபாடங்களும் கூரைப்பகுதிகளும் சேதம் அடைந்தன.

மாலையில் முகமாலை தேவாலய அகதி முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. முகாமிலிருந்தவர்கள் பதுங்கு குழிக்குள் மறைந்து கொண்டதால் தப்பினர். அங்கு நின்ற சைக்கிள்கள் சேதம் அடைந்தன. (இ -117)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### உனைப்பாடும் ஞானமின்றி வாடுகின்றேன்!

ராகம்:- கௌரிமனோகரி தாளம்:- ஆதி

**பல்லவி**

உனைப்பாடும் ஆசையினால் பாடுகின்றேன் - நான்
உனைப்பாடும் ஞானமின்றி வாடுகின்றேன் - முருகா
— [உனைப்......]

**அனுபல்லவி**

நெஞ்சினில் ஆசையை ஏன்வளர்த்தாய் - என்னை
விஞ்சிடும் துயரினை ஏனளித்தாய் - குமரா
— [உனைப் ......]

**சரணம்**

செந்தமிழ் அறிவைநான் அறியவைப்பாய் - போற்றும்
செந்தமிழ் இசையினை உணரவைப்பாய் - நாளும்
தேன்தமிழ்ப் பாமலர்கள் மலரச்செய்வாய் - என்றும்
தேன்தமிழ்ப் பாமலர்கள் வளரச்செய்வாய் - முருகா
[உனைப் ...... ]

[இன்று நல்லூர்க் கந்தசுவாமி [illegible]]

# தமிழன் தனித்துவத்துடன் வாழ அடியிட்டவர் தனிநாயகம் அடிகள்

பன்முகப் பரிமாணங்கள் கொண்ட நல்லறிஞராகவும், ஞானியாகவும் விளங்கிய சுவாமி சேவியர் எஸ். தனிநாயகம் அடிகளார் தமிழின் ஆய்வுப் பரப்பளவை உலக அரங்குக்கு உயர்த்திய முன்னோடியாகவும் விளங்குகின்றார்.

தமிழ் ஆய்வின் ஒன்றிணைந்த முழுமையில் முகிழ்த்ததே ''தமிழ் இயல்'' என்ற பெரும் தொடர். இலக்கணம், இலக்கியம் என்பவை மட்டுமல்ல, தமிழின் பரிமாணங்கள், சமூகவியல், மானுடவியல், தொல்பொருளியல், அறிவியல், இறையியல், மெய்யியல், கல்வியியல் என்றவாறு விரிவடைந்து செல்லும் பல்துறை ஆய்வுப்புலங்களையும் உள்ளடக்கியதே 'தமிழியல்'.

வண. பிதா தனிநாயகம் அடிகளார் பலமொழிகளைக் கற்றவர்பலசமயங்களை அறிந்தவர். பல்வேறு பண்பாடுகளையும் நுணுகிக் கற்றவர். அவரது ஆளுமை பன்முகப் பரிமாணங்களைக் கொண்டது.

அறிவுக்களஞ்சியமாக விளங்கிய அடிகளாரின் தரிசனத்திலே தமிழ்மொழி உலக அரங்கின் ஆய்வு மொழியாக அரியணை ஏறியது. ''அனைத்துலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்'' என்ற வியத்தகு அமைப்பு ஆரம்பமாவதற்கும் முழுமை பெறுவதற்கும் அடிகளாரே முன்னோடியாவார்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற புறநானூற்றுப் பாடல்வரிகளுக்கு ஆய்வுப் புலத்திலே அடிகளார் புத்துயிரளித்தார்.

அனைத்துலக மட்டத்தில் தமிழ் ஆய்வுச் சஞ்சிகை ஒன்றை அமைத்த பெருமைக்குரியவராகவும் அடிகளார் விளங்குகின்றார். தமிழர் பண்பாடு (Tamil Culture) என்ற அந்த ஆய்வுச் சஞ்சிகை உலகப் பல்கலைக் கழகங்கள் எங்கும் தேமதுரத் தமிழோசையைப் பரப்பும் ஆய்வுச்சஞ்சிகையாக அமைந்தது.

### தமிழ்த் தூதுவன்

ஏனையோரைத் தமிழாய்வுக்குத் தூண்டியதுடன், தவத்திரு தனிநாயக அடிகள் தாமே தமிழியல் ஆய்வுகளை மேற்கொண்டார். சுமார் 140 ஆய்வுக் கட்டுரைகளை அவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதினார். திருக்குறளின் புகழை அனைத்துலகிலும் பரப்பிய தமிழ்த் தூதுவனாகவும் அடிகளார் விளங்கினார்.

> தமிழ் ஞானி தனிநாயகம் அடிகளாரின் நினைவு தினம் இன்று, ஆகஸ்ட் இரண்டாம் திகதியாகும்.

''வள்ளுவரும் கிரேக்க ஒழுக்க இயலும்'' ''வள்ளுவரும் உரோமிய ஒழுக்க இயலும்'', ''வள்ளுவரும் புத்தரின் ஒழுக்க இயலும்'' முதலிய ஆய்வுச் சொற்பொழிவுகளை அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்தியதுடன், அவற்றை உலகறியும் வண்ணம் அச்சிட்டு வெளியிட்டார்.

தமிழர்தம் கல்வி தொடர்பான உயர்நிலை ஆய்வுகளை வளர்த்த முதல்வராகவும் சுவாமியவர்கள் விளங்குகின்றார். ''பழந்தமிழ் இலக்கியங்களிற் கல்வியாளர் பற்றிய பகுப்பியல்'', ''பழந்தமிழ்க் கல்வியாளர்கள்'', ''சங்க இலக்கியத்தில் விரிவாகும் ஆளுமையின் இயல்பு'' முதலான கல்வியியல் ஆய்வுக் கட்டுரைகளை அவர் எழுதினார்.

### ஆய்வில் பக்குவம்

உணர்ச்சிகளுக்கு உட்படாது புலமை நிலையிலே சமய ஆய்வுகளை மேற்கொண்ட சிறப்பும் அடிகளாருக்குரியது. ''சமயமும் பண்பாடும்'', ''சமயமும் சமூகமும்'', ''சமயமும் தமிழ்ச் சமூகமும்'', ''சமயமும் கலைகளும்'' முதலாம் ஆய்வுக் கட்டுரைகளை உயர்நிலை ஆய்வுப் பக்குவத்துடன் அவர் எழுதினார்.

தனிநாயகம் அடிகளாரது பணிகள் வரலாற்றின் இன்றியமையாத் தேவையாக அமைந்ததுடன், தமிழர் பண்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கான தரிசனமாகவும் அமைந்தது.

தமிழ் மக்கள் தமது தனித்துவத்தை நிலைநாட்டுவதற்கும், உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் ஓர் உயர்ந்த பண்பாட்டுக் குடையின் கீழே ஒன்றிணைவதற்கும் அடிகளார் செய்த பணிகள் அளப்பிலாதவை.

கிழக்கையும், மேற்கையும், அறிவு பூர்வமாக ஒன்றிணைத்த ஆளுமையின் சின்னமாக அடிகளார் விளங்குகின்றார்.

தமிழும் தமிழனும் தனித்துவத்துடன் வாழ அடிகோலிய அடிகளார் இன்றைய எமது உரிமைப் போராட்டத்திற்கே வித்திட்டவர் என்றால் அது மிகையாகாது. அன்னாரின் கனவு நனவாக எமது போராட்டம் தொடரட்டும்; வெற்றி பெறட்டும்.

ஜீ. எம். செபஸ்தியாம்பிள்ளை
(விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

02 - 8 - 1990 வியாழக்கிழமை


# வைத்தியசாலை மீண்டும் இயங்க நிர்வாகம் முயற்சிக்க வேண்டும்

## நேற்றைய கலந்துரையாடலில் மாத்தையா

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 2
தற்போது மூடப்பட்டிருக்கும் யாழ். போதனா வைத்தியசாலையை மீண்டும் இயங்கச் செய்வதற்கு வைத்தியசாலை நிர்வாகம் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர்களின் கலந்துரையாடலில் நேற்று கலந்துகொண்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. மாத்தையா மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

நேற்றுக் காலை 11மணிக்கு மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

சகல வைத்தியர்களும் கலந்துகொண்ட இந்தக் கலந்துரையாடலில் திரு. மாத்தையாவும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் இணைப்பதிகாரி திரு. மாணிக்கசோதியும், ஏனைய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

யாழ். வைத்தியசாலையை பழைய இடத்தில் மீண்டும் இயங்கவைப்பது குறித்தே முக்கியமாக ஆராயப்பட்டது.

தற்போதைய சூழ்நிலையில் வைத்தியசாலை, வைத்தியர்கள், ஊழியர்களின் பங்கு என்பன குறித்தும் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

# அனைத்துக் கட்சிக் குழுவின் மாலைதீவு விஜயம் ஒத்திவைப்பு

கொழும்பு, ஆக. 2
அனைத்துக்கட்சி நாடாளுமன்றக்குழுவின் மாலைதீவு விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குழுவின் தலைவரான சபாநாயகர் எம். எச். முஹம்மது குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கு இதனை அறிவித்திருக்கிறார்.

இம்மாதம் 4 ஆம் திகதி அனைத்துக் கட்சி நாடாளுமன்றக்குழு மாலைதீவு தலைநகர் மாலே செல்வதாக இருந்தது.

வடக்கு - கிழக்கு நிலைமை பற்றி சார்க் நாடுகளுக்கு விளக்குவதே இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

ஏற்கனவே இந்தக் குழு புதுடில்லி சென்று திரும்பியது தெரிந்ததே.

குறிப்பிட்ட தினங்களில் மாலைதீவு அரசுக்கு பல உத்தியோக கடமைகள் இருப்பதனால்தான் இவ்விஜயம் ஒத்திவைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (இ-எ)

## மானிப்பாய் ஆஸ்பத்திரியில்

# வெளிநோயாளர் பிரிவும் கிளினிக்கும் இயங்குகின்றன

யாழ்ப்பாணம், ஆக. 2
மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவும், கிளினிக்குகளும் இயங்க ஆரம்பித்துள்ளன.

இந்த வைத்தியசாலை இயங்கும் கட்டடத்தில் போதிய இடவசதி இல்லாத காரணத்தால் வெளிநோயாளர் பிரிவு, கண், காது, பல், சருமரோக கிளினிக்குகள் இது வரை இயங்காமல் இருந்தன.

தற்போது வைத்தியசாலையுடன் இணைந்த கட்டடத்தில் இந்த பிரிவுகள் இயங்க ஆரம்பித்துள்ளன என்றும் உரிய முறையில் சிகிச்சை அளிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## கல்வியதிகாரிகள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக 2
கல்வித் திணைக்கள அதிகாரிகள், கோட்டக் கல்வி அதிகாரிகள் மற்றும் கொத்தணி அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி மண்டபத்தில் நடைபெறும் என வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

கல்வி, நிர்வாகம், பாடசாலை நிலைமைகள் மற்றும் தற்போதைய அரசியல் சூழ்நிலையால் எழுந்துள்ள சிக்கல்கள் ஆகியவை தொடர்பாக முக்கிய பிரமுகர்கள் இந்தக் கலந்துரையாடலில் கருத்து வெளியிடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 2
காரைநகர் கடற்படை முகாமில் இருந்து கடந்த திங்கட்கிழமை ஏவப்பட்ட பீரங்கிக்குண்டினால் நாகன் இராசேந்திரம் (வயது 20) என்ற இளைஞர் காயமடைந்தார். (இ - 10)

## பளையில் சூடு; இளைஞர் பலி

பச்சிலைப்பள்ளி, ஆக. 2
கல் ஏற்றிக் கொண்டு கண்டி வீதியால் சென்று கொண்டிருந்த லொறி மீது பளையில் ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

லொறியில் சென்ற இளைஞர் ஒருவருக்கு வயிற்றில் குண்டு பட்டதால் அவர் மரணமானார். (இ-117)

## மின்சாரக் கேபிள்களைத் திருத்த

# ஆனையிறவு ராணுவத்தின் அனுமதி பெற முயற்சி

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 2
கிளிநொச்சிப் பகுதியில் சேதமடைந்த மின்சாரக் கேபிள்களைத் திருத்தச் செல்வதற்கு ஆனையிறவு இராணுவத்தினரிடம் அனுமதியைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அறியவந்துள்ளது.

கிளிநொச்சியில் நடந்த இராணுவத் தாக்குதல்களால், மின்சாரக் கேபிள்கள் சேதமடைந்து குடாநாட்டிற்கான லக்சபான மின்சாரம் தடைப்பட்டுள்ளது தெரிந்ததே.

இப்போது கிளிநொச்சியில் இராணுவத்தினர் இல்லாததால் சேதமடைந்த கேபிள்களைத் திருத்த யாழ்ப்பாணத்திலிருந்து மின் ஊழியர்கள் செல்லக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

ஆனால் கிளிநொச்சி செல்வதற்கு ஆனையிறவில் முகாமிட்டுள்ள இராணுவத்தினரின் அனுமதியைப் பெற வேண்டி உள்ளது.

இராணுவ அனுமதியை அத்தியாவசிய சேவைகள் நாயகத்தினூடாகப் பெறுவதற்கு, செஞ்சிலுவைச் சங்கம் நேற்று முயற்சி மேற்கொண்டது.

இதேவேளை மின்சார சபையின் யாழ். பிராந்திய அலுவலகத்தினரும், அத்தியாவசிய சேவைகள் நாயகத்தினூடாகத் தமது தலைமை அலுவலகத்துக்குத் தகவல் தெரிவித்தனர். [அ-5]

## அகதிகளுக்கு----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
றடைந்தது.

மகஜரைப் பொறுப்பேற்றுக்கொண்ட தூதரக அதிகாரி அதனைத் தலைமைக் காரியாலயத்திற்குத் தாமதமின்றி அனுப்பி வைப்பதாக உறுதியளித்ததுடன் அகதிகளின் குறைபாடுகள் பற்றியும் நேரில் கேட்டறிந்து ஆறுதலும் கூறினார்.

''தமிழ் அகதிகளின் இன்னல்களை நன்குணர்கிறோம். அகதிகளுக்கு வேண்டிய சகல நிவாரண உதவிகளையும் வழங்குவதுபற்றி உயர் ஸ்தானிகருக்கு உடன் தெரிவிப்பேன்'' என்று அவர் சொன்னார். (அ-30)

## யாழ். வந்தனர்

கொழும்பில் இருந்து நேற்று 50 பேர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

கொழும்பில் அகதிகள் முகாம்களில் தங்கியிருந்த இவர்கள் பாதுகாப்புடன் வாகன அணி ஒழுங்கு செய்வதற்கு எவரும் முயற்சி செய்யாததால் வருவது வரட்டும் என்ற மனநிலையுடன் ரயில் மூலம் வந்ததாகத் தெரிவித்தனர்.

ரயில் மூலம் மதவாச்சி வரை வந்த இவர்கள் அங்கிருந்து பஸ் மூலம் யாழ்ப்பாணம் வந்தடைந்தனர்.

## போட்டி....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பதவியில் இருந்து செல்வி ஜெயலலிதாவையும் நீக்குவதாகவும் இக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதிய பொதுச் செயலாளராக திரு. எஸ். திருநாவுக்கரசுவும் பொருளாளராக திரு. பி. குழந்தைவேலுவும் இணைப் பொதுச் செயலாளராக திரு. கே. கே. எஸ். இராமச்சந்திரனும் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர். [இ-எ]

# இலங்கைத் தமிழ் இளைஞர் சுவிட்சர்லாந்தில் கொலை

## ஆட்சேபித்து ஊர்வலம்

பெர்ன், ஆக. 2
சுவிட்சர்லாந்தில் இலங்கைத் தமிழ் அகதி இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டதை ஆட்சேபித்து சுமார் 2 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் கடந்த திங்கட்கிழமை சூரிச் நகரில் உள்ள வீதிகள் வழியாக அமைதியான ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

மலர்வளையங்களையும் சுலோக அட்டைகளையும் அவர்கள் ஏந்திச் சென்றனர்.

''எங்களின் உயிர்களைப் பாதுகாக்கவும்; இனவன் செயல்கள் ஒழியட்டும்'' — என்று அவர்கள் ஏந்திச் சென்ற அட்டைகளில் எழுதப்பட்டிருந்தது. (இ-எ)

## ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 2
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் கோயிலில் ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம் நாளை வெள்ளிக்கிழமை காலை இடம்பெறும்.

ஸ்ரீ வரலக்ஷ்மி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று, திருவீதியுலா நிகழும். [ஒ]

## தெய்வ ஆசி அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஆக. 2
ஆவரங்கால் சிவன் கோயிலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெற்றிக்கும், தமிழ் மக்களின் சுபீட்சத்திற்கும் தெய்வ ஆசி கோரி நாளை வெள்ளிக்கிழமை 1008 சங்கு வைத்து அபிஷேகமும் பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெற இருக்கின்றன.

இதனை முன்னிட்டு காலையிலிருந்து மாலைவரை கூட்டுப் பிரார்த்தனை, பஜனை ஆகியனவும் இடம் பெறும். (அ)

## திருவாசக பண்ணிசை

யாழ்ப்பாணம், ஆக. 2
திருக்கேதீஸ்வரம் திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபையினரின் சார்பில் நடத்தப்படும் திருவாசகப் பண்ணிசையும் கூட்டுப் பிரார்த்தனையும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவயிரவர் ஆலயத்தில் நடைபெறும். (இ)

## காரைநகரில் கொடும்பாவி எரிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 2
காரைநகரில் பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

கடந்த 31 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது.

இரவு 9 மணி அளவில் [illegible] பாவி [illegible] எரிக்கப்பட்டது. (இ-10)

## விமானக் குண்டு....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களை எதிர்கொள்வதற்காக- இராணுவத்தினருக்கு உதவியாக - விமானப்படையினர் குண்டுவீச்சுகளை நடத்தினர்.

ஐந்து பொம்மர்கள், ஒரு சீ பிளேன்,ஒரு ஹெலிக்கொப்டர்ஆகியவையும், சிலஅவ்ரோ விமானங்களும் ஐந்து மணி நேரம் நடத்திய குண்டு,ஷெல் தாக்குதல்களை அடுத்து இராணுவத்தினர் சுமார் ஒருமைல் தூரம் வரை முன்னேற முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் தொடர்ந்து இழப்புகளுடன் முன்னேறிய இராணுவம் பரப்பங்கண்டல், உயிலங்குளம் ஆகிய பகுதிகளில் வீதியின் இருமருங்கிலும் இருந்த வீடுகளைச் சேதமாக்கிய வண்ணம் சென்றதாக அறியவந்தது.

உயிலங்குளம் பகுதியில் பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதால் அப்பகுதியில் சுமார் ஐந்து மைல் தூரப்பாதை புகை மண்டலமாகக் காட்சியளித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் 2 ஆம் லெப்ரினன்ட் கேடில்ஸ் (மன்னார்), 2 ஆம் லெப்ரினன்ட் உதயகுமார் (சுதா- கரையூர்), பொக்ஸன் (உயிலங்குளம்), உரியவன் (பூநகரி) ஆகியோர் வீரமரணமடைந்தனர். [அ]

## வல்லை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
கட்டடங்கள், தபாலகம் மற்றும் பல வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

[illegible] தாக்குதல்கள் உக்கிரமாக [illegible]. (ஒ-160)

# மரண அறிவித்தல்கள்

## திரு. சபாபதி சுப்பையா

(ஓய்வு பெற்ற வரவு உத்தியோகஸ்தர்)

சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த சபாபதி சுப்பையா 26 07-1990 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

இவர் தெய்வானையின் அன்புக் கணவரும், வரதராஜன், அசோகன், சூடாமணி, ரெங்கராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலராணி, ஆதி, சிவநடராஜா (இணுவில் சிவப்பிரகாசம் ம. வி.) ஆகியோரின மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 27-07-1990 வெள்ளிக்கிழமை தகனக்கிரியை செய்யப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

[13605]

## இராமசாமி பூபாலபுண்ணியசிங்கம்

(குடியேற்ற அதிகாரி, கிளிநொச்சி)

கரம்பன் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வேலணை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலபுண்ணியசிங்கம் 29.7.90 அன்று காலமானார். அன்னார் ஜெகதாம்பாளின் அன்புக் கணவரும், வேலணை துரைச்சாமி மத்தியமகாவித்தியாலயமாணவிகளான அனுஷா, யசித்தா, சோபனா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சுருவில் இராமசாமி, மாரிமுத்து அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலணை மேற்கைச் சேர்ந்த நடராசா, அன்னலட்சுமி அவர்களின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30.7.90 அன்று நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் கவலையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, மக்கள்.

வேலணை மேற்கு,
வேலணை.

(13972)

# மரண அறிவித்தல்கள்

## பாலகிருஷ்ணன் [காண்டீபன்]

தாவடி தெற்கைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் (காண்டீபன்) நேற்று அகால மரணமானார்.

இவர் தாவடி மு.சி.அப்பையா தம்பதிகளின் அன்பு மகனும், பாலகுமாரன், பாலசுப்பிரமணியம் (கனடா), பாலேந்திரன் (கனடா), ஜெகதீஸ்வரி, பாலகாந்தன் (ஜேர்மனி), பாலபாஸ்கரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), பாலராஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், க. பரமசிவம் (விரிவுரையாளர் — யாழ். பல்கலைக்கழகம், யாழ். தொழில் நுட்பக் கல்லூரி) அவர்களின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் தாவடி தெற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று காலை 10·30 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் தாவடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
மு. சி. அப்பையா

[13610]

## திரு. செல்லையா சபாரத்தினம்

(இளைப்பாறிய கட்டட மேற்பார்வையாளர், புகையிரதப் பகுதி)

திரு. செல்லையா சபாரத்தினம் [இளைப்பாறிய கட்டட மேற்பார்வையாளர், புகையிரதப் பகுதி] 01-08-1990 அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், பொன்னுத்துரை [இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்], நடராசா [இளைப்பாறிய பிரதம லிகிதர்], பூரணம், நாகம்மா ஆகியோரின் சகோதரரும், பேரின்பநாயகம் [இளைப்பாறிய யாழ் / புகையிரதப் பகுதி ஊழியர்], பத்மநாதன் [புகையிரதப் பகுதி, வவுனியா], யோகரத்தினம் [போதனாசிரியர், யாழ் / தொழில் நுட்பக் கல்லூரி], கருணைநாதன் [சமாதான நீதவானும், நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப அலுவலகப் பொறுப்பதிகாரியும்], சதானந்தபோதம், சிவநாதன், கருணாகரன், மங்கையர்க்கரசி, சிவநிதி, சிவமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமசாமி [அரசினர் வைத்தியசாலை, கோண்டாவில்], விமலதாஸ் [போதனாசிரியர், யாழ் / தொழில் நுட்பக் கல்லூரி], கணேசரத்தினம்ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 22/2, பாரதி வீதி, கச்சேரி — நல்லூர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 2-8-90 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:
ச. கருணைநாதன் J.P.

(13970)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 02-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org